அதேபோன்று அங்கேயிருக்கின்ற அந்த Hostel. மருத்துவக் கல்லூரியிலே இருக்கின்ற பெண்களுக்கான Hostel போதுமானதாக இல்லை. பழைய காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இட வசதி அதிகம் வேண்டும் என்கின்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அவசர சிகிச்சைப் பிரிவிற்காக, நம்முடைய மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலையினுடைய ஓரங்களிலே நான்கு இடங்களில்தான் இருப்பதாக இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பரவலாக்கப்பட வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. மணி: அந்த அடிப்படையிலே, காரியங்களைச் செய்வதற்கு அரசு தயாராக வேண்டும்.

போலி மருந்து. இப்போது மத்திய அரசிடமிருந்துதான், நமக்கு மருந்துகள் பூராவும் தரப்படுகின்றன. ஒரு ஏஜென்சி வழியாக, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான மருந்துகளைத் தருகின்றார்கள். அந்த மருந்துகள் ஊடே போலியான மருந்துகள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றைக் கண்டறிவதற்கு நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை. பூச்சிக்கொல்லி மருந்துகளில் எந்த அளவிற்கு அதிலே கலப்படம் செய்யப்படுகிறதோ, அந்த அடிப்படையில்தான் இதிலேயும் செய்யப்படுகின்ற பல சம்பிரதாயங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதில் ஒரு தெளிவான கருத்தைச் சொல்ல இயலாது. எனவே அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது)

6. அறிவிப்புகள்

(ஆ) பத்திரிகையாளர்களுக்கு அறிவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, ஒரு அறிவிப்பைச் சொல்லிவிடுகிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு. பத்திரிகை நிருபர்கள் இந்தச் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளைக் கவனித்து செய்தி சேகரிப்பதற்காகத்தான்

2003 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

இங்கே அனுமதிக்கப்படுகிறார்கள். இங்கே அமர்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றிக் கவனிக்காமல், இங்கே பேசுவது பற்றியும் கவனிக்காமல், 'இந்து' நிருபராக வந்திருக்கிற திருமதி ராதா வெங்கடேசன், இண்டியன் எக்ஸ்பிரஸ் நிருபர் புஷ்பா, இரண்டு பேரும் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். தயவுசெய்து சட்டப் பேரவை நிகழ்வுகளைக் கவனித்து இதிலே இருப்பவற்றை குறித்து பத்திரிகைக்கு அனுப்புவதற்காகத்தான் இங்கே நீங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்ற அறிவுரையை இப்போது தருகிறேன்.

திரு. மணி, நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைப்பற்றிச் சொல்கின்றபோது, மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு அருகில் இருக்கின்ற பாலரங்காபுரம் மருத்துவமனைக்கு நகர்ப்புற மக்கள் பெருமளவில் வருவதன் காரணமாக கூட்ட நெரிசல் இருக்கின்றது. அங்கு சில நேரங்களில் மின்சார தடை ஏற்படுகின்றது. எனவே அந்தப் பகுதியிலே, அந்த மருத்துவமனைக்கு ஒரு ஜெனரேட்டர் வேண்டும். அங்கே பணியாளர்கள் போதுமானதாக இருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. மருத்துவமனைக்காக நிறைய பணத்தைச் செலவழிக்கின்றோம். போதுமான டாக்டர்கள், பணியாளர்கள் எல்லாம் இதற்குத் தேவைப்படுகின்றது. அந்த வகையிலே மாநிலம் பூராவிலும், நம்முடைய மாவட்ட மையங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு அதிகப்படியாக Scan கொடுத்தாலும் சரி, X-Ray கருவியைத் தந்தாலும் சரி, மருத்துவர்களைத் தந்தாலும் சரி; பணியாளர்களைத் தருவதோடு போதுமான மருந்தையும் தர வேண்டும்.

இப்போது தனியார் மருத்துவமனைக்குப் போனால், அதிகமான பணத்தை வாங்குகிறார்கள். அதற்கு எல்லையே கிடையாது. அதில் ஓர் எல்லையை நிர்ணயிக்க முடியுமா என்பதுபற்றி நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும். சில நிர்பந்தங்களின் காரணமாக சில தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றோம். அப்படிச் செல்கின்றபோது, அங்கு என்னதான் நடக்கிறது என்று கேட்டால், திரும்பி வர முடியாத அளவிற்குப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். அந்த நிலைக்கு ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.